# மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சென்னை, மார்ச் 3: சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வடபழனி மெட்ரோ ரயில் நிலையம் உள்பட 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் வரும் ஞாயிற்றுக்கிழமை(மார்ச் 8) இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இந்த முகாமை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், உடல் நலம் மற்றும் உயிரியல் தொழில் துறை அமைப்பு ஆகியவை இணைந்து நடத்துகின்றன.

இந்த முகாம் வடபழனி, ஷெனாய் நகர், விமானநிலையம், ஆலந்தூர், அசோக்நகர், சென்ட்ரல் ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் வரும் 8-ஆம் தேதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் நடைபெறுகிறது.

இதில், பி.எம்.ஐ (உயரம், எடை), ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் இந்த இலவச மருத்துவ முகாமில் பங்கேற்று பயன்பெறலாம்.